## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண்.118/2018

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 04–ம் நாளன்று 116 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.67–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **மாணிக்கவாசகம்** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : |
| **முகவரி** | : | | **மதம்** | : |
| **ஜாதி** | : | | **வயது** | : |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 116 வது பிரதிவாதியின் கணவர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 30.09.2008 தேதியிட்ட ஜேசுதாஸ் ஞானகிறிஸ்டின் பெயரில் ஏற்பபட்ட கிரையப்பத்திரம் நகல் பி.வா.சா.ஆ.341 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 07.03.2012 தேதியிட்ட தங்கமணி அவர்கள் பெயரில் ஏறபட்ட கிரையபத்திரம் நகல் பி.வா.சா.ஆ.342 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 6, 8 முதல் 15, 18 முதல் 31, 33 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 53, 55 முதல் 64, 67 முதல் 72, 74 முதல் 100, 102 முதல் 107, 109, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது ஈரோடு மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வசித்து வரும் ஊரிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 75 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. பி.வா.சா.ஆ.341 மூலம் உங்கள் மனைவி வாங்கிய கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8–ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால் பி.வா.சா.ஆ.341–ன் கீழ் உங்கள் மனைவிக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மனைவி வாங்கிய பி.வா.சா.ஆ.341 கிரையப்பத்திரம் செல்லாததால் அதன் அடிப்படையில் உங்கள் மனைவி வாங்கிய பி.வா.சா.ஆ.342 கூட்டுப்பட்டா செல்லாது என்று சொன்னால் சரியல்ல. தும்பிவாடி கிராமத்தில் எனக்கும், என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்கான ஆவணங்களில் உங்கள் மனைவி சாட்சியாக கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. நீதிமன்றத்திற்கு யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் வழக்கறிஞர் அழைத்ததின் பேரில் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.04 18:21:12 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.